**த. நா.ச.பே. எண்: 026** **நாள் : 20.04.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (20.4.2023) சட்டமன்றப் பேரவையில், அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு குறித்து மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதில்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தப் பிரச்சினை குறித்து முறைப்படி தமிழக காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது. சட்டப்படி வழக்கும் பதிவு செய்திருக்கிறது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, குறிப்பிட்டு சொன்னார். நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறது. எனவே, நீதிமன்றம் இதுகுறித்து விசாரித்திருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், இங்கே பிரச்சினை வந்த காரணத்தினால், நான் சொல்ல விரும்புவது, மேற்படி சம்பவம் தொடர்பாக, 14 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் 11-7-2022 அன்று, E2-இராயப்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 190/2022, ச/பி 147, 148, 341, 324, 326, 356, IPC 3 of Act குற்ற எண் 191/2022, 147, 148, 341, 324, 506, IPC குற்ற எண் 192/2022 மற்றும் குற்ற எண் 213/2022 இதர ஆகிய 4 வழக்குகளும் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்பேரில் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறைக்கு மேல் விசாரணைக்காக 29-8-2022 அன்று மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, முறைப்படி காவல் துறையைப் பொறுத்தவரையில் வழக்கும் பதிவு செய்திருக்கிறது. உரிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. எனவே, இதில் காவல் துறை எதிலும் தலையிடவில்லை; வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்ற செய்திகளெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

•••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in